**சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம் - 2015**

---

இலங்கை சுங்கத்தின் சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றுமடங்கிய வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமைக் கூற்றிலும் முற்றுமடங்கிய வருமானக் கூற்றிலும் கடந்த காலப்பகுதிக்குரிய ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் கூறொன்றாக உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் மூலம் தேவைப்படுகின்ற அல்லது அனுமதி அளிக்கப்பட்டவை தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றிக்கு ஒன்று ஈடு செய்யப்படக் கூடாத போதிலும், கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 547,799,236 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதிகளிலிருந்து கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 240,232,487 கூட்டுத்தொகையான மீதிகள் கழிக்கப்பட்டு தேறிய மீதியான ரூபா 307,566,745 மீதி ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் 04 கடன்பட்டோர் மீதிகளை தீர்த்துவைப்பதற்காக ரூபா 2,245,500 கூட்டுத்தொகையான பணம் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் மேலதிக நேர வருமானக் கணக்கிற்கு செலவு வைத்த காரணத்தால் முன்னைய ஆண்டின் வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதி அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது மேற்படி தவறினை சரிசெய்வதற்காக ரூபா 2,245,500 தொகை தவறுதலாக ஆண்டின் வருமானத்திற்கு வரவு வைத்து கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மீண்டும் அத்தவறை சரிசெய்வதற்காக நிதியாண்டின் வருமானத்திற்கு வரவு வைத்து முன்னைய ஆண்டின் சீராக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 4,491,000 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபை மூலம் இலங்கை சுங்கத்தின் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்திற்கு அறவிடப்படுகின்ற பணத்தில் 20 சதவீதமான பெறுமானத்தினை அரசிற்கு செலுத்த வேண்டியிருந்ததுடன், எஞ்சிய 80 சதவீதமான அளவினை உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டும். மீளாய்வாண்டின்

இறுதியில் நிதியத்தின் பொறுப்பொன்றாக காணப்பட்ட ரூபா 2,496,000 தொகையில் அரசிற்கு செலுத்த வேண்டிய அளவினையும் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய அளவையும் வேறாக இனங்கண்டு கணக்கீடு செய்யாமல் மொத்தப் பெறுமதியும் நிதியத்தின் பொறுபொன்றாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கப்பல் சரக்கு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக குறித்த விமானக் கம்பனிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்தில் 50 சதவீதம் வீதம் இலங்கை அரசிற்கும் கப்பல் சரக்கு பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டும். எனினும் குறித்த கம்பனிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட முழுத் தொகையில் அரசிற்கு செலுத்த வேண்டிய பகுதியும் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய பகுதியையும் வெவ்வேறாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அறவிடப்பட்ட முழுத்தொகையையும் செலுத்த வேண்டிய பெறுமானமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 307,566,745 செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது.

.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டில் மேலதிக நேரச் செலவினம் வருமானக் கூற்றின் பிரகாரம் ரூபா 565,111,555 ஆக இருந்த போதிலும், பட்டோலையின் பிரகாரம் அச்செலவினம் ரூபா 562,817,226 ஆக இருந்தமையால் ரூபா 2,294,329 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 186,037,730 கூட்டுத்தொகையான 148 கடன்பட்டோர் மீதிகளுக்கிடையே தெரிவு அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 170,870,160 கூட்டுத்தொகையான 30 கடன் மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியியில் உள்ளவாறு 148 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 186,037,730 ஆக இருந்ததுடன், அக் கடன்பட்டோரில் 89 சதவீதம் அல்லது ரூபா 166,201,633 தொகை 13 பிரதான நிறுவனங்களிலிருந்து நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அக்கடனை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

2007 ஒக்தோபர் 20 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி சுங்கமேலதிக நிதியத்திற்கு சேகரிக்கப்படுகின்ற பணத்திலிருந்து சுங்க பதவியணியினருக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்ய முடியுமாக இருந்த போதிலும், ஏனைய பதவியணியினருக்கும் மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

## 2.5 போதியளவு அதிகாரம் பெறப்படாத கெடுக்கல் வாங்கல்கள்

நீண்டகாலமாக தீர்வுசெய்யப்படாமல் காணப்பட்ட ரூபா 7,017,198 பெறுமதியான 04 நடைமுறைச் சொத்து மீதிகளும் ரூபா 125,087 தொகையான நடைமுறைப் பொறுப்பு மீதியொன்றும் அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 181,150,976 மிகையாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 73,157,047 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 107,993,928 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மேலதிக நேர வருமானம் 20 சதவீதத்தினால் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களால் வழமையான கடமை நேரத்திற்கு புறம்பாக வேலைகளில் செய்யப்படுகின்ற கடமைகளுக்காகவும் வழமையான கடமை நிலையங்களிலிருந்து புறம்பான இடங்களில் நிறைவேற்றப்படும் கடமைகளுக்காகவும் வெவ்வேறு தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், இலங்கை முதலீட்டு சபைக்கு தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்காக அந்நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்களும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அவ்வாறே அம்மேலதிக கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள் இந்நிதியத்திற்கு செலவினமொன்றாக கருதப்படும். மீளாய்வாண்டினுள் மேற்குறித்த படி மேலதிக நேரம், கப்பல் சரக்கு பரீட்சிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக முறையே ரூபா 849,470,690, ரூபா 308,184,006 மற்றும் ரூபா 14,976,000 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வேலைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு முறையே ரூபா 565,111,555, ரூபா 154,092,003 மற்றும் ரூபா 11,980,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் கடமை செயற்பாடுகளுக்குரித்தாக விநியோகிக்கப்பட்டிருந்த 2007 ஒக்தோபர் 20 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 04 (அ) பந்தியின் பிரகாரம் பொது நிர்வாக செயலாளரிடம் விசாரித்து நிதி அமைச்சின் செயலாளரால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்ற கொடுப்பனவு அளவுகளுக்கு இணங்க மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013 ஆம் ஆண்டின் போது அதுவரை செலுத்தப்பட்டு வந்த மேலதிக நேரப் படிகள் விகிதத்தில் திணைக்களத்தின் மேலதிக நேரக் குழுவினால் மேலும் 45 சதவீதத்தினால் அதிகரித்துக் கொள்வதற்காக இடமளிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காகவும் மேற்படி வர்த்தமானியின் பிரகாரம் அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலங்கைச் சுங்கத்தினால் தற்போதைய மேலதிகநேரக் கொடுப்பனவு செய்யும் போது 24 மணித்தியால விடுமுறை தினமொன்றிற்காக 27 மணித்தியாலம் மேலதிக நேரக் கொடுப்பனவொன்றும் வழமையான வேலை நாளொன்றுக்காக 18 ¾ வரையான மேலதிக நேரக் கொடுப்பனவொன்றும் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் அதற்காக வர்த்தமானியின் பிரகாரம் அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 தொழிற்பாட்டு செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1967 ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கைச் சுங்கத்தினால் சேவை வழங்கப்பட்ட 75 நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 263,500 தொகையான ஆரம்ப வைப்புப் பணம், சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பெறப்பட்டிருந்த வட்டி ரூபா 12,023,151 ஆக இருந்தது.

இப்பெறுமதி மீளச் செலுத்த வேண்டிய வைப்பாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், குறித்த வைப்புக்களுக்கு உரித்தான நிறுவனங்களின் நிலைத்திருதன்மை தொடர்பாக எந்தவொரு புலனாய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அம்மீதிகளை தீர்வு செய்வதற்கு முறையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 4 விமானக் கம்பனிகளிலிருந்து 755 விமான தடவைகளுக்காக பட்டியல் வழங்கப்படாமையால் கிடைக்க வேண்டிய ரூபா 2,274,000 தொகையான விமான சேவைகள் கட்டணங்களை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. மேலும் இலங்கைச் சுங்கத்தினால் சேவை வழங்கப்படுகின்ற பிரதான விமானக் கம்பனிக்காக மீளாய்வாண்டின் பெப்ரவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக 2016 மார்ச் இலேயே பட்டியல் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 44,820,000 ஆக இருந்தது. பட்டியல் வழங்குவதில் தாமதம் தொடர்பாக இதற்கு முன்னரும் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சில உத்தியோகத்தர்கள் மாதமொன்றுக்குரிய மொத்த மேலதிக நேர மணித்தியால எண்ணிக்கையை மிகைத்து மேலதிகநேர சேவையில் ஈடுபடல் மற்றும் மேலதிக நேர பதிவேட்டின் பிரகாரம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் தொடர்ச்சியாக கடமைகளில் ஈடுபடுதல் மற்றும் மேலதிக நேர சேவையில் ஈடுபடல் ஆகியன நடைமுறையில் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 யூலை 01 ஆந் திகதிய 478 ஆம் இலக்கம் மற்றும் 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 478 A ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் சில பிரிவுகளில் மாதாந்த மேலதிக நேர வேலை மணித்தியால எல்லை 300 மணித்தியாலங்களுக்கும் 400 மணித்தியாலங்களுக்கும் இடையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த எல்லையை மிகைத்து மேலதிக நேர கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(இ) சில சுங்க உத்தியோகத்தர்கள் வருடம் பூராவும் எவ்வித விடுமுறையொன்றும் பெற்றுக்கொள்ளாமல் தொடர்ச்சியாக கடமைகளில் ஈடுபட்டிருந்தமை மற்றும் அந்த ஒவ்வொரு நாளிலும் மேற்குறித்ததன் பிரகாரம் மேலதிக மேலதிகநேரப் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்கள் மாதமொன்றுக்கு 650 மணித்தியாலங்களிலிருந்து 680 மணித்தியாலங்கள் வரையான வீச்சில் மேலதிகநேர உரித்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், கணக்காய்வின் போது அது அசாதாரண நிலைமையொன்றாக அவதானிக்கப்பட்டது.

**4.4 வெளிப்படையான மோசடிகள்**

மேலதிக சேவையில் ஈடுபடுதல் மற்றும் கொடுப்பனவு தொடர்பாக இலங்கைச் சுங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மிகவும் பலவீனமான நிலைமையில் காணப்பட்டதுடன், அதனால் மேலதிக நேரப் பதிவேட்டில் கையொப்பமிட்டவுடனேயே மேலதிக நேர உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. இந்த உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் தொடர்பாக பல வருடங்களாக கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிலைமையை முறைப்படுத்துவதற்காக எந்த நடவடிக்கைளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது இலங்கைச் சுங்கத்தின் வெளிநாட்டு செயலமர்வுகளுக்கு சமுகமளித்த இரு உத்தியோகத்தர்களுக்காக வெளிநாடு சென்ற காலப்பகுதியினுள் ரூபா 13,807 தொகை மேலதிக நேரப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு நிதி மோசடியொன்று சுட்டிக் காட்டும் அவ்வாறான கொடுப்பனவொன்றை அங்கீகரித்தல், கொடுப்பனவு செய்தல் போன்ற எவ்வித பரிசோதனையொன்றில்லாமல் கவனயீனமாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி நிதியங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு, அதற்கு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 15 ஆந் திகதிக்கு முன் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் பாதீட்டிற்காக அங்கீகாரம் 09 மாத காலதாமதத்துடன் 2015 யூலை 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சுங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள் வருடாந்த பாதீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | விமான கம்பனிகளிலிருந்து விமான சேவைகள் கட்டணங்களை அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மேலதிக நேர கொடுப்பனவுக் கட்டுப்பாடு | மேலதிக நேர கொடுப்பனவிற்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் முறையான நடைமுறையொன்று இல்லாமை |